பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
22 09 2025 MONDAY 6.45 AM

**மாநில செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் இன்று நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளன.
- இந்த சீர்திருத்தங்கள் சுயசார்பு இந்தியா இலக்கை அடைய பேருதவியாக இருக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம், நாட்டின் சுயசார்பில் புதிய அத்தியாயமாக அமையும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- சிறுபான்மையினர் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் இன்று நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளன.

சுதந்திர தின உரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிவிப்பின்படி, சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களை மாற்றியமைக்க சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த வரி விகித மாற்றங்கள் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளன.

அன்றாட வீட்டு உபயோகப் பொருட்கள் உட்பட பெரும்பாலான அத்தியாவசியப் பொருட்கள் குறைந்தபட்ச ஐந்து சதவீத வரி விதிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

சில பொருட்களுக்கு 18 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

புகையிலைப்பொருட்கள், மதுபானம், ஆன்லைன் விளையாட்டுகள் மற்றும் வைரம் போன்றவற்றுக்கு 40 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சீர்திருத்தங்கள் சுயசார்பு இந்தியா இலக்கை அடைய பேருதவியாக இருக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை மக்கள் அதிக அளவில் பயன்படுத்துமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் கேட்டுக்கொண்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வரி விகித மாற்றங்கள் காரணமாக, வேளாண்மை, சுகாதாரம், ஜவுளி உள்ளிட்ட துறைகளில் உற்பத்தி அதிகரிக்கும் என்றும் திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இந்த சீர்திருத்தங்கள், 140 கோடி இந்தியர்களுக்கும் பிரதமர் வழங்கிய நவராத்திரி பரிசு என்று தெரிவித்தார்.

இதன்மூலம் நடுத்தர வகுப்பினர், ஏழைகள் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் பெருமளவு பயனடைவார்கள் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் வளர்ச்சிக்கு இந்த சீர்திருத்தங்கள் மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுயசார்பில் புதிய அத்தியாயமாக இது அமையும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

சிறுபான்மையினர் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நபிகள் நாயகத்தின் ஆயிரத்து 500-ஆவது பிறந்த நாள் விழாவில் பேசிய அவர், இஸ்லாமியர்களுக்கு மூன்று புள்ளி ஐந்து சதவீத உள்ஒதுக்கீடு, சிறுபான்மையினர் நல வாரியம், உருது அகாடமி போன்றவற்றை பட்டியலிட்டார்.

சென்னை விமான நிலையம் அருகே புதிய ஹஜ் இல்லம் கட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இஸ்லாமியர்களின் உரிமைகளை தமது அரசு பாதுகாக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திண்டுக்கல்லில் நடைபெற்ற அக்கட்சியின் மதுரை மண்டல பூத் கமிட்டி மாநாட்டில் பேசிய அவர், கடந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில் மாநிலத்தில் 17 வன்கொடுமை சம்பவங்கள் நடந்திருப்பதாக தெரிவித்தார்.

காவல் நிலையங்களில் 24 பேர் உயிரிழந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக ஆட்சியை அகற்றி அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆட்சி அமைய பிஜேபி தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

*(Opening Tune - 7 Sec)*

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது மெட்ரோ ரயில் மற்றும் நகர்ப்புற வீட்டுவசதி திட்டங்கள்.

<<<<<<<>>>>>

*(மெட்ரோ ரயில் திட்டம் என்பது வெறும் போக்குவரத்திற்கானது மட்டுமின்றி நாட்டின் வளர்ச்சியிலும் முக்கிய பங்களித்து வருகிறது.*

*மெட்ரோ ரயில் திட்டங்கள் நகர்ப்புற மக்களின் பயணத்தை எளிதாக்கி வருகிறது என்றால் அது மிகையல்ல.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, உலக அளவில் 3வது பெரிய மெட்ரோ கட்டமைப்பை கொண்ட நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.*

*கொல்கத்தாவில் இம்மாதம் ரயில்வே திட்டங்களை தொடங்கி வைத்து உரையாற்றிய பிரதமர், 2014ஆம் ஆண்டு 250 கிலோமீட்டர் தொலைவுக்கு மட்டுமே இயக்கப்பட்டு வந்த மெட்ரோ ரயில்கள், தற்போது ஆயிரம் கிலோமீட்டர் தூரம் இயக்கப்படுவதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – மோடி (தமிழ்) . . செகண்ட்ஸ்)*

*நகர்ப்புறங்களில் குறைந்த விலையில் வீட்டு வசதியை ஏற்படுத்தும் வகையில், ஒரு கோடியே 16 லட்சம் வீடுகளை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, அதில் 93 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

*இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைத்தது தங்களது கனவை நனவாக்கியுள்ளதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - பொதுமக்கள் செகண்ட்ஸ்)*

*நகர்ப்புறங்களில் மெட்ரோ ரயில் திட்டங்கள் மற்றும் குறைந்தவிலை வீட்டு வசதி திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தை மத்திய அரசு மேம்படுத்தியுள்ளது (Closing Signature Tune).*

<<<<<<>>>>>

***இருவரிச் செய்திகள்***

**பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ள இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா-வின் முடிவை பாலஸ்தீன வெளியுறவுத்துறை வரவேற்றுள்ளது.**

<<<<<<>>>>>

**பங்களதேஷில் டெங்கு காய்ச்சலுக்கு பலியானோர் உயிரிழந்தோர் எண்ணிக்கை 179-ஆக அதிகரித்துள்ளது.**

<<<<<<>>>>>

**இந்திய கடற்படை கப்பலான *INS Trikand*, நல்லெண்ணப் பயணமாக சைப்ரஸ் நாட்டின் *Limassol* துறைமுகத்தை சென்றடைந்துள்ளது.**

<<<<<<>>>>>

**சமூக சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குருவின் நினைவு தினத்தையொட்டி, கேரள மாநிலம் வர்கலா சிவகிரி மடத்தில் நடைபெற்ற மகா பரிநிர்வானா மாநாடு நேற்று தொடங்கியது.**

<<<<<<>>>>>

**வனவிலங்குகள் நடமாட்டத்தை கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளதாக தமிழக வனத்துறை முதன்மை வனப்பாதுகாவலர் திரு ராகேஷ்குமார் டோக்ரா தெரிவித்துள்ளார்.**

<<<<<<>>>>>

**விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில், மகாளய அமாவாசையை முன்னிட்டு நடைபெற்ற ஊஞ்சல் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.**

<<<<<<>>>>>

**கோவை – தன்பாத், ஆலப்புழா – தன்பாத் இடையே நாளை இயக்கப்படவிருந்த சிறப்பு ரயில்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.**

<<<<<<>>>>>

*தூய்மையே சேவை இயக்கத்தையொட்டி, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்கள் மற்றும் அலுவலக வளாகங்களில் ஆயிரத்து 500 மரக்கன்றுகள் நடப்பட்டன.*

*<<<<<<<>>>>>*

*சென்னை மாநகராட்சி சார்பில் மெரினா நீலக்கொடி கடற்கரைப்பகுதியில் நேற்று நடைபெற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை ஏராளமானோர் கண்டு களித்தனர்.*

*<<<<<<<>>>>>*

*சென்னை அம்பத்தூர் பகுதியில் மதுவிலக்கு காவல்துறையினர் நடத்திய சோதனையில், போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட திரிபுரா மாநிலத்தை சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர்.*

*<<<<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.*

*துபாயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து பேட் செய்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்தது.*

*172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 18 புள்ளி ஐந்து ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 174 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*39 பந்துகளில் 74 ரன் குவித்த அபிஷேக் சர்மா, ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.*

*<<<<<<<>>>>>*

*குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai பட்டம் வென்றார்.*

*ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 2-6, 6-1, 6-4 என்ற செட் கணக்கில், Shruti Ahlawat-ஐ வென்றார்.*

*<<<<<<<>>>>>*